திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னா, பின்னா என்பது ஒரு தவறான வார்த்தை போல இங்கே விமர்சனம் நடந்துகொண்டு இருக்கிறது. இலக்கியத்திலே ஒரு மன்னவனைப் பார்த்துப் பாடுகின்றபோது "கன்னா பின்னா மன்னா" என்று பாடியிருக்கின்றார்கள். (சிரிப்பு) அதற்கு விளக்கம் சொல்கின்ற புலவர் அவர்கள் "கன்னா என்று சொன்னால் கர்ணனே, பின்னா என்று சொன்னால், பின்னவனே, அவனுக்குப் பின் வந்தவனே, மன்னவனே என்று சொல்வதாக இலக்கியம் கூறுகின்றது. அதைத் தவறான வார்த்தையாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 307, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

307—

கோயில்களில் பூஜை

*20363—திரு. செ. வெங்கடாஜலம்:

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கோயில்களில் அரசு மானியத்துடன் ஒரு கால பூஜை நடைபெறும் கோயில்கள் எத்தனை உள்ளன?

(ஆ) மானியம் இல்லாத கோயில்களுக்கும் மானியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) 9702 திருக்கோயில்களில் பொதுமக்கள் நன்கொடை மற்றும் அரசு மானியத்துடன் ஒருகால பூஜை நடைபெற்று வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) ஆம்.

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயில்களுக்குச் சென்று தரிசனம் செய்யும்

2003 ஏப்ரல் 24]

ஏழை பக்தர்களுக்கு பசியினைப் போக்கும் வகையிலே அன்னதானத் திட்டத்தை நாட்டுக்கு அர்ப்பணித்து நாட்டுமக்களின் இதயத்தில் குடியிருந்த கோயிலாக விளங்கும் அம்மா அவர்களின் நல்லாட்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளில் வருமானம் இல்லாத கோயில்களைப் புதுப்பிக்கும் பணிகள் நிறைவடையாமல் உள்ளன. குறிப்பாக எனது தொகுதியிலுள்ள பச்சப்பட்டி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கரிய பெருமாள் காடு வடபுறம் உள்ள அருந்ததியர் காலனி அருள்மிகு காளியம்மன் கோயிலைக் கட்டி முடிக்கவும், மேலும் அந்தக் கோயில்களில் ஒருகால பூஜை செய்யவும் மற்றும் எனது தொகுதி கார்பெட் சேரியிலுள்ள மாரியம்மன் கோயில், நெஞ்சம்பட்டி மாரியம்மன் கோயில், காந்தி மகான் தெரு மாரியம்மன் கோயில்களுக்கு அரசு மானியம் வழங்குமா, மேலும் மானியம் பெறும் கோயில்களுக்கு இலவச மின்சாரம் வழங்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதி பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்திலேதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளிலுள்ள திருக்கோயில்களுக்கு நிதி வழங்குகின்ற திட்டம் சென்ற ஆண்டு வரையிலும் ஆண்டு ஒன்றுக்கு 100 ஆலயங்களுக்குத்தான்--25 ஆயிரம் ரூபாய் ஒரு ஆலயத்திற்கு வழங்கலாம்--என்று இருந்ததை மாற்றி, இந்த ஆண்டு 250 ஆலயங்களுக்கு, ஆதிதிராவிடர் ஏழை எளிய மக்களுடைய கிராமப்புறத் திருக்கோயில்களுக்கு எல்லாம் திருப்பணி செய்யலாம் என்று ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தாங்கள் சொல்லிய பகுதியில் இருக்கிற ஆலயங்களையும் வருகின்ற ஆண்டுகளில் திருப்பணி செய்வதற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வெங்கடாஜலம்.

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியினைத் தெரிவித்து, எனது பகுதியிலே அருள்மிகு சேலம் நெத்திமேடு காளியம்மன் திருக்கோயில் திருப்பணி சுமார் 30 இலட்சம் ரூபாயில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். இத்திருக்கோயில்

பணி முழுமையடையவும், கும்பாபிஷேகம் நடைபெறவும் அரசின் புதிய அறிவிப்பிலேயே நிதி ஒதுக்கீடு கொடுத்து உதவிட வேண்டுகோள் விடுத்தேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் கேட்பவர்களுக்கு எல்லாம் வாரி வழங்கும் அமைச்சர் அவர்கள் இத்திருக்கோயிலுக்கு குறைந்தபட்சம் ரூபாய் ஐந்து இலட்சமாவது நிதி ஒதுக்கிக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் நகரத்தில் வசதி படைத்த ஆன்மீகத்தில் பற்று உடையவர்கள் அதிகம் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவர்களிடத்திலே நீங்கள் நிதி வசூல் செய்யுங்கள். போதவில்லை என்று சொன்னால், அறநிலையத் துறையின் மூலமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அந்தத் திருப்பணி செய்வதற்கு நிதி உதவி செய்யும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள கோயில்களில் அரசு மானியத்துடன் ஒருகால பூஜை நடைபெறுகின்ற கோயில்களின் எண்ணிக்கை 9,702 என்று அமைச்சர் அவர்கள் பதிலுரையில் குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே உள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கை 36,324 என்பதாக அறிகிறேன். அப்படி 36,324 கோவில்கள் இருக்கிற நிலையில் 9702 கோவில்களில் ஒரு கால பூஜை நடைபெறுவதாகக் குறிப்பிட்டு இருக்கையில், மீதமுள்ள 26,622 திருக்கோயில்களில் அனைத்துக் கோவில்களிலும் ஒரு கால பூஜை நடைபெறுகிறதா? அப்படி இல்லை என்றால் நடைபெறுகிற 2003-2004 ஆம் ஆண்டுகளில் மிச்சமிருக்கிற 26,622 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை நடைபெறாத கோவில்களைத் தேர்ந்தெடுத்து அவற்றையும் ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, படிப்படியாக அனைத்து ஆலயங்களிலும் ஒரு கால பூஜை நடத்துவதற்கு புரட்சித் தலைவி

2003 ஏப்ரல் 24]

அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த அடிப்படையில் சென்ற ஆண்டு--2002-2003 ஆம் ஆண்டு--460 கோவில்கள் ஒரு கால பூஜைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மீண்டும் எங்கெல்லாம் ஒரு கால பூஜை நடைபெறாமல் இருக்கிறதோ அந்த ஆலயங்கள் எல்லாம் கண்டறியப்பட்டு அங்கே எல்லாம் ஒரு கால பூஜை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 308, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

308—

அவசர ஊர்தி

***8189—திரு. கே.கே. உமாதேவன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகரில் அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டு பகுதித் திட்டத்தின்கீழ் 20 புதிய ஆம்புலன்ஸ் ஊர்திகள் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கி அதற்கேற்ப திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஒரு ஆம்புலன்ஸ் வண்டி வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, வழங்கல் ஆணையும் Supply Order சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் ஆம்புலன்ஸ் கிடைத்துவிடும். எனவே அந்த மருத்துவமனைக்கு இன்னும் ஒரு மாத காலத்திற்குள் ஆம்புலன்ஸ் வந்துவிடும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS